KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2, No. n06 (2018)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v2in06.1

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

திருக்குறளில் இறையறமெய்யியல்

Divine Righteous Mysticism in Tirukkural

Dr. U. Alibava[1,*]

[1] Professor & Head Department of Tamil Studies Bharathidasan University Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 20 April 2018
Revised: 22 April 2018
Accepted: 23 April 2018
Published : 02 May 2018

Article ID
KIJTS-2018-0048

Peer review
Double-blind peer review

Keywords
Tirukkural
Divine Righteous Mysticisms
God
Primordial Source
Spirituality
Divine Attributes
Human Existence
Ethical Conduct
Virtue
Moral Philosophy.

ABSTRACT

The article "Divine Righteous Mysticism in Tirukkural" examines the philosophical understanding of God as articulated in the Tirukkural. It approaches divine metaphysics through questions concerning the nature, existence, attributes and primacy of God, and considers how these ideas are connected with human life and ethical conduct. The discussion highlights the significance of the opening invocation to the Divine and the portrayal of God as the primordial source and foundation of the world. It also considers the relationship between divine knowledge and human understanding, including the role of learning, moral discipline, truthfulness and virtuous living. The article draws attention to the way the Tirukkural relates reflection on God to the purpose of human existence, the regulation of conduct and the attainment of a meaningful life. Rather than treating spirituality as an abstract belief alone, the text presents it as a principle that informs personal character and social responsibility. Through a thematic reading of relevant couplets, the article shows that the Tirukkural's conception of the Divine is closely associated with wisdom, ethical awareness and the foundations of righteous living.

How to cite this article: Dr. U. Alibava (2018). திருக்குறளில் இறையறமெய்யியல். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *2*(n06), 1. https://doi.org/10.63300/kalanjiyam.v2in06.1
Copyright and licence: © 2018The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024

மின்னஞ்சல் : alibavapkm@gmail.com

சுருக்கம்

"திருக்குறளில் தெய்வநெறி மறைஞானம்" என்னும் இக்கட்டுரை, திருக்குறள் வெளிப்படுத்தும் கடவுள் பற்றிய தத்துவப் பார்வையை ஆராய்கிறது. கடவுளின் இயல்பு, இருப்பு, பண்புகள், முதன்மை ஆகியன தொடர்பான வினாக்கள் வழியாக தெய்வ மெய்யியலை அணுகி, அக்கருத்துகள் மனித வாழ்வோடும் அறநெறி நடத்தையோடும் எவ்வாறு இணைகின்றன என்பதைக் கருதுகிறது. கடவுள் வாழ்த்து என்னும் தொடக்க வணக்கத்தின் முக்கியத்துவத்தையும், கடவுளை உலகின் முதற்காரணமாகவும் அடித்தளமாகவும் காட்டும் விளக்கத்தையும் இவ்வாய்வு சிறப்பித்துக் காட்டுகிறது.

மேலும், தெய்வ ஞானத்திற்கும் மனித அறிவுக்கும் இடையேயான தொடர்பை—கற்றல், ஒழுக்க நெறி, வாய்மை, அறவாழ்வு ஆகியவற்றின் பங்கு உள்ளடங்கலாக—ஆராய்கிறது. கடவுள் பற்றிய சிந்தனையை மனிதப் பிறப்பின் நோக்கம், நடத்தையை நெறிப்படுத்துதல், பொருளுள்ள வாழ்வை அடைதல் ஆகியவற்றோடு திருக்குறள் இணைக்கும் முறையை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. ஆன்மிகத்தை வெறும் கருத்தியல் நம்பிக்கையாக மட்டும் கருதாமல், தனிமனித ஒழுக்கத்தையும் சமூகப் பொறுப்பையும் வழிநடத்தும் கொள்கையாகவே இந்நூல் முன்வைக்கிறது. தொடர்புடைய குறட்பாக்களைக் கருப்பொருள் அடிப்படையில் வாசிப்பதன் வழியாக, திருக்குறளின் தெய்வக் கருத்து, ஞானம், அறவுணர்வு, நீதிவாழ்வின் அடித்தளங்கள் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையது என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

திறவுச்சொற்கள்: திருக்குறள்; தெய்வநெறி மறைஞானம்; கடவுள்; முதற்காரணம்; ஆன்மிகம்; தெய்வப் பண்புகள்; மனிதப் பிறப்பு; அறநெறி நடத்தை; அறம்; ஒழுக்கத் தத்துவம்.

மனிதனின் அறிவு, ஒழுக்கம், வாழ்வியல் நோக்கம், பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை, மனத்தூய்மை ஆகியவற்றை இறைநிலையோடு இணைத்துப் பேசும் தத்துவப் பகுதியே திருக்குறள் கடவுள் வாழ்த்தாகும். இவ்வதிகாரத்தில் இடம்பெறும் பத்துக் குறள்களும் இறைவனின் இயல்பு, அறிவின் முதன்மை, அறவாழ்வின் அடித்தளம், மனக்கவலை நீக்கம், பிறவிப் பெருங்கடலைக் கடத்தல் ஆகிய கருத்துகளைப் பல்வேறு பரிமாணங்களில் எடுத்துரைக்கின்றன.

உலக இலக்கிய வரலாற்றில் காலத்தைக் கடந்து நிற்கும் படைப்புகள் சிலவே. அவற்றுள் திருக்குறள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் மனிதச் சிந்தனையின் வழிகாட்டியாக விளங்கும் இந்நூல், மொழி, இனம், சமயம், நாடு ஆகிய எல்லைகளைக் கடந்து மனிதகுலத்தின் பொது அறநூலாகத் திகழ்கின்றது. மகாகவி பாரதியார், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு எனத் திருவள்ளுவரின் உலகளாவிய சிறப்பைப் பாடியுள்ளார். "யாமறிந்த புலவரிலே கமபனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோ

வைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை" (பாரதியார் கவிதைகள், ப. 175) எனறும் போற்றியுள்ளார்.

திருவள்ளுவர் தமது நூலை அறத்துப் பாலுடன் தொடங்குகின்றார். அறத்துப்பாலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து இடம்பெறுவது தற்செயலான இலக்கிய அமைப்பன்று. மனித வாழ்வின் அடிப்படையாக அறத்தையும், அறத்தின் அடிப்படையாக மெய்யுணர்வையும் நிலைநிறுத்தும் சிந்தனை அமைப்பின் வெளிப்பாடாகவும் எண்ணத் தோன்றுகிறது.

கடவுள் வாழ்த்து அதிகாரம் பத்துக் குறள்களைக் கொண்டது. இப்பத்துக் குறள்களிலும் இறைவனின் பெருமை பேசப்படுகின்றது என்றாலும், அவற்றின் உட்பொருள் இறைவனைப் போற்றுவதோடு நின்றுவிடுவதில்லை. மனிதன் எவ்வாறு வாழ வேண்டும்? கல்வியின் பயன் யாது? மனத்தூய்மை எதனால் உருவாகின்றது? ஆசைகளிலிருந்து எவ்வாறு விடுபடுவது? பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவது எங்ஙனம்? என்பன போன்ற அடிப்படையான வாழ்வியல் வினாக்களுக்கு இவ்வதிகாரம் விடையளிக்கின்றது.

எனவே, கடவுள் வாழ்த்து அதிகாரத்தை இறைநம்பிக்கையின் வெளிப்பாடாக மட்டுமே அணுகுவது அதன் முழுமையான இலக்கியப் பொருளைக் காட்டாது. அதை மனிதனின் அறிவையும், உணர்வையும், ஒழுக்கத்தையும் செம்மைப்படுத்தும் மெய்யியல் விளக்கமாகவும் காண வேண்டும்.

இறையற மெய்யியல்

இறையற மெய்யியல் என்பது இறைவனின் இயல்பு, இருப்பு, தன்மை, ஆற்றல், உயிருக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்பு ஆகியவற்றை ஆராய்ந்து உண்மையை விளக்கும் தத்துவச் சிந்தனையாகும். இறைவனைப் பற்றிய அறிவையும் இறைவன் தொடர்பான உண்மைகளையும் தத்துவ அடிப்படையில் ஆராய்ந்து விளக்குவதே இறையற மெய்யியல் எனலாம். திருக்குறள் கடவுள் வாழ்த்து இறையற மெய்யியலை வெளிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது.

திருக்குறளின் முதல் அதிகாரமாக அமைந்துள்ள கடவுள் வாழ்த்து, அறத்துப்பாலின் பாயிரவியலில் இடம்பெறுகின்றது. பத்துக் குறள்களைக் கொண்ட இவ்வதிகாரம், 1. ஆதி பகவன்

2. வாலறிவன்

3. மலர்மிசை ஏகினான்

4. வேண்டுதல் வேண்டாமை இலான்

5. இறைவன்

6. பொறிவாயில் ஐந்தவித்தான்

7. தனக்குவமை இல்லாதான்

8. அறவாழி அந்தணன்

9. எண்குணத்தான்

எனும் இறைவனின் இயல்பைப் பல்வேறு அடைமொழிகள் வழியாக விளக்குகின்றது.

இவ்வாறு இறைவனைப் பல்வேறு பண்புகளின் அடிப்படையில் சுட்டுகின்ற வள்ளுவர், இறுதியில் அவனது திருவடிகளைச் சார்வதன் மூலம் மனிதன் பெறுகின்ற வாழ்வியல் பயன்களை எடுத்து மொழிகிறார்.

இவ்வதிகாரத்தின் நோக்கத்தை விளக்கும்போது, "வள்ளுவர் எடுத்துக்கொண்ட பொருள்களுக்கு ஏற்புடைய கடவுளையாதல் வாழ்த்துதல்" (திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 5) என்று பரிமேலழகர் குறிப்பிடுகிறார். இதன் மூலம் கடவுள் வாழ்த்து என்பது வெறும் வழிபாட்டு மரபு மட்டுமன்று; நூலின் கருத்தியல் அடித்தளத்தை அமைக்கும் இலக்கிய உத்தியாகவும் திகழ்கிறது என்பது புலனாகின்றது.

கடவுளின் இருப்பும் முதன்மையும்

திருவள்ளுவர் திருக்குறளைத் தொடங்குவதற்கு எடுத்துக்கொண்ட உவமை மிகவும் நுட்பமானது. தமிழ் எழுத்துகளின் தொடக்கமாக அகரம் அமைந்துள்ளதைப் போல, உலகத்தின் தொடக்கமாக ஆதிபகவன் விளங்குகின்றான் என்கிறார்.

அகர முதல எழுத்துஎல்லாம்; ஆதி

பகவன் முதற்றே உலகு (குறள். 1)

எனும் இக்குறளில் 'அகரம்' என்பது எழுத்துலகின் முதன்மையைக் குறிக்கின்றது. 'ஆதிபகவன்' என்பது உலகின் ஆதிமுதல்வனைக் குறிக்கின்றது. இவ்விரண்டிற்கும் இடையிலான ஒப்புமை எடுத்துக்காட்டு உவமையணியின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது. எழுத்துகளுக்கு அகரம் அடிப்படையாக இருப்பது எவ்வளவு இயல்பானதோ, அவ்வாறே உலகின் இருப்புக்கும் இறைமுதல்வன் அடிப்படையாக இருக்கின்றான் என்பது இக்குறளின் மையக்கருத்தாகும். உலகில் கடவுள் இருக்கிறாரா, இல்லையா எனும் விவாதத்திற்கு இடையில் வள்ளுவர் இங்கு இறைவனின் உருவத்தை வரையறுக்கவில்லை. அவனது இருப்பின் முதன்மையை மட்டுமே எடுத்துரைக்கின்றார். இதனால் இறைவன் குறித்த கருத்து குறிப்பிட்ட உருவ வழிபாட்டின் எல்லைக்குள் அடைபடாமல், தத்துவப் பொதுமையைப் பெறுகின்றது. இலக்கிய நோக்கில் பார்க்கும்போது, 'அகரம்' என்ற மிக எளிய எழுத்தைக் கொண்டு உலகின் தோற்றம் குறித்த மிகப்பெரிய தத்துவத்தை விளக்குகின்றார் வள்ளுவர். எளிய சொற்களுக்குள் ஆழமான பொருளைப் பொதிந்து வைக்கும் திருக்குறளின் தனித்துவத்திற்கு இக்குறள் பெருஞ் சான்றாகத் திகழ்கிறது.

கற்றவர் வணங்குவது கடன்

தூய அறிவு வடிவானவனின் திருவடிகளை வணங்காதவர், படித்ததனால் பெற்ற பயன்தான் என்ன? என்று வள்ளுவர் வினாத் தொடுக்கிறார். இந்த வினாவே கடவுளின் திருவடிகளை வணங்காதவன் படித்தும் ஒரு பயனும் இல்லை எனும் விடையையும்

தருகிறது. ‘வணங்காத மனிதனுக்கு வளமில்லை; அவனை வாழ்த்தாத நெஞ்சுக்கு உயர்வில்லை, ஒரு கையில் இறை வேதம் மறு கையில் நபி போதம், இருக்கையில் வாழ்க்கையில் ஏன் இந்தத் தயக்கம்’ நாகூர் இ. எம். ஹனிபா என்று பாடுவதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இதனையே வள்ளுவர்,

கற்றதனால் ஆய பயன்என்கொல், வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்? (குறள். 2)

எனக் கேட்கிறார். மனித வாழ்க்கையில் கல்விக்கு உயர்ந்த இடம் உண்டு. ஆனால் கல்வி என்பது வெறும் நூலறிவைப் பெறுவதோடு முடிந்துவிடுவதில்லை. அது மனிதனின் சிந்தனையையும், செயலையும், பண்பையும் மேம்படுத்த வேண்டும் என்பதே வள்ளுவரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ‘கற்றதனால் ஆய பயன்’ என்ற தொடர் கல்வியின் நோக்கத்தை வினாவுகின்றது. ‘வாலறிவன்’ என்பது தூய்மையான பேரறிவுடைய இறைவனைக் குறிக்கின்றது. அவனது திருவடிகளை வணங்காதவர்களுக்குக் கல்வியால் கிடைக்கும் பயன் என்ன என்று வள்ளுவர் வினவுகின்றார். இக்குறளில் இடம்பெறும் வினா, வெறும் கேள்வியாக அமையவில்லை; கல்வியின் பயனை மறுபரிசீலனை செய்யத் தூண்டும் சிந்தனை உத்தியாக இருக்கின்றது.

கல்வி மனிதனை அறிவாளியாக்கலாம். ஆனால் அந்த அறிவு பணிவையும், அறத்தையும், உயர்ந்த ஒழுக்கத்தையும் உருவாக்கவில்லை என்றால் அதன் பயன் முழுமையடையாது. எனவே, கல்வியின் இறுதி இலக்கு அறிவுப் பெருக்கம் மட்டுமல்ல; அறிவின் வழியாக மனிதப் பண்பை உயர்த்துதலுமாகும். இன்றைய கல்விமுறையிலும் இக்கருத்து பெரும் பொருத்தமுடையதாக உள்ளது. பட்டங்களும் பதவிகளும் பெருகுகின்ற இன்றைய சூழலில் மனிதநேயமும் ஒழுக்கமும் குறைந்துவிடுமானால், அக்கல்வியின் அடிப்படை நோக்கமே கேள்விக்குறியாகிவிடும் என்பதை வள்ளுவர் நுட்பமாக உணர்த்துவதும் இதன் மூலம் புலப்படுகிறது.

கட்டாயம் கடவுளை வணங்கத்தான் வேண்டுமா?

பார்க்க முடியாத கண், கேட்க முடியாத காது முதலியவை போலவே, எட்டுக் குணங்களைக் கொண்ட இறைவனின் திருவடிகளை, வணங்காத தலைகள் புலன்கள் இல்லாத பொறிகள் போல, இருந்தும் பயன் இல்லாதவையே என்பதை வள்ளுவர்,

கோள்இல் பொறியில் குணம்இலவே, எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை (குறள். 9)

எனும் குறளில் குறிப்பிடுகிறார். இக்குறள் மனித உடலின் உறுப்புகளுக்கும் அவற்றின் பயனுக்கும் இடையிலான தொடர்பை எடுத்துரைக்கும் சிறந்த உவமை அமைப்பைக் கொண்டுள்ளது. ‘கோளில் பொறி’ என்பது செயல்படாத புலனுறுப்பைக் குறிக்கின்றது. அதுபோல, இறைவனின் திருவடிகளை வணங்காத தலை

பயனற்றதாகும் என வள்ளுவர் கூறுகின்றார். இங்கு 'எண்குணத்தான்' என்ற இறைவனின் சிறந்த எண் குணங்களைக் குறிக்கின்றது. எண் குணங்கள் என்பன சமயங்களிடையே வேறுபடுகின்றன. சைவ ஆகமச் சார்புடைய பரிமேலழகர் உரையில் எண்குணங்கள்,

1. எதனையும் சாராது தனக்குத் தானே தலைவனாக இருக்கும் 'தன்வயத்தனாதல்',

2. மாசற்ற திருமேனியை உடையவனாக இருக்கும் 'தூய உடம்பினனாதல்',

3. இயல்பாகவே அறிவு உடையவனாக இருக்கும் 'இயற்கை உணர்வினனாதல்',

4. அனைத்தையும் முழுமையாக அறியும் 'முற்றும் உணர்தல்',

5. ஆணவம், கன்மனம், மாயை ஆகிய மும்மலங்களிலிருந்து இயல்பாகவே விடுபட்டிருக்கும்

'பாசங்களின் நீங்குதல்',

6. எல்லா உயிர்களிடத்தும் அளவற்ற கருணை கொண்டிருக்கும் 'பேரருள் உடைமை",

7. எல்லையற்ற ஆற்றலைப் பெற்றிருக்கும் 'முடிவில் ஆற்றல் உடைமை',

8. குறைவற்ற, அழிவற்ற பேரின்பத்தை உடையவனாக இருக்கும் 'வரம்பில் இன்பம்

உடைமை' (பரிமேலழகர் திருக்குறள் உரை, பக். 6-7)

என விளக்கப்படுகின்றன. இவ்வாறு இறைவனின் உயர்ந்த பண்புகளை விளக்குகின்ற வள்ளுவர், அவற்றை உணர்ந்து வணங்காத மனிதத் தலை பயனற்றதாகும் என்று கூறுகின்றார். இக்குறளை வெறும் வழிபாட்டுக் கருத்தாக மட்டும் கருதிவிடக்கூடாது. அறிவு, பணிவு, உயர்ந்த பண்புகளை மதித்தல் ஆகியவற்றின் அவசியத்தையும் இது உணர்த்துவதாகவே கொளள வேண்டும்.

மனிதனின் பெருமை அவனது உடலமைப்பிலோ பதவியிலோ இல்லை; அவன் ஏற்றுக்கொள்ளும் உயர்ந்த மதிப்பீடுகளிலும் அவற்றைப் பின்பற்றும் செயல்களிலுமே உள்ளது என்பது இக்குறள் உணர்த்தும் வாழ்வியல் விளக்கமாக இருக்கின்றது.

வணங்குவதால் பயன் உண்டா?

வணங்குவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது என்று கேட்பவர்கள் காலந்தோறும் இருந்து வருகின்றனர். அவர்களுக்கு, 'எதிலும் விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை மனத்தால் எப்போதும் நினைப்பவர்க்கு உலகத் துன்பம் ஒருபோதும் இல்லை; ஒருபோதும் துன்பம் வரா' என வள்ளுவர் விடை தருகின்றார். இதனை,

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு

யாண்டும் இடும்பை இல (குறள். 4)

எனும் குறளில் எடுத்துரைக்கிறார். இக்குறளில் வள்ளுவர் இறைவனின் உயர்ந்த பண்பாக விருப்பு வெறுப்பின்மையைக் குறிப்பிடுகின்றார். 'வேண்டுதல்' என்பது

விருப்பத்தையும், 'வேண்டாமை' என்பது வெறுப்பையும் குறிக்கின்றன. இவ்விரு மனநிலைகளையும் கடந்தவன் இறைவன். அவனது திருவடிகளைச் சார்ந்தவர்களுக்குத் துன்பம் இல்லை என்பது குறளின் வெளிப்படையான பொருளாகும். மனித வாழ்வில் துன்பங்கள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் அளவற்ற ஆசையும், நிறைவேறாத எதிர்பார்ப்பும், வெறுப்புணர்வும் முக்கியமானவை. விரும்பியது கிடைக்காதபோது ஏமாற்றமும், வெறுத்தது நிகழும்போது மனக்கவலையும் உருவாகின்றன. இவற்றைக் கடந்து மனச்சமநிலையை அடைவதே உயர்ந்த வாழ்வியல் நிலையாகும். இதனையே, 'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்று புத்தர் பிரான் குறிப்பிடுகிறார். 'ஆசையை அறுமின் ஆசையை அறுமின் ஈசனோடாயினும் ஆசையை அறுமின்' என்று திருமூலரும் விளம்புகிறார். எனவே, இக்குறள் இறைவனின் பண்பை விளக்குவதோடு மனிதன் அடைய வேண்டிய மனப்பக்குவத்தையும் வலியுறுத்துகின்றது. விருப்பு வெறுப்புகளைக் கடந்த மனமே துன்பங்களைக் கடக்கும் மனமாகும் என்பது இக்குறள் மூலம் வள்ளுவர் மனித குலத்திறகுத் தரும் செய்தியாக இருக்கின்றது.

மனக் கவலை வரா

தனக்கு இணையில்லாத கடவுளின் திருவடிகளைச் சேர்ந்தவர்க்கு மட்டுமே துன்பம் வாரா என்கிறார் வள்ளுவர். மற்றவர்களின் மனக் கவலையைப் போக்குவது கடினம் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்

மனக்கவலை மாற்றல் அரிது (குறள். 7)

என்பது அக்குறள். இறைவனுக்கு நிகரானவர் எவரும் இல்லை என்ற கருத்தை இக்குறள் முன்வைக்கின்றது. 'தனக்குவமை இல்லாதான்' என்ற தொடர் இறைவனின் ஒப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது. மனிதனுடைய மனம் பல்வேறு கவலைகளால் அலைக்கழிக்கப்படுகின்றது. ஆசை, அச்சம், பொறாமை, கோபம், இழப்பு, ஏமாற்றம் போன்றவை மனக்கவலைக்குக் காரணமாகின்றன. இத்தகைய மனக்கவலைகளை மாற்றுவதற்கான வழியாக இறைவனின் திருவடிகளைச் சார்தலை வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

இதனை உளவியல் நோக்கிலும் அணுகலாம். உயர்ந்ததொரு வாழ்க்கை இலட்சியத்தை ஏற்றுக்கொள்கின்ற மனிதன் தன் அன்றாடத் துன்பங்களை எதிர்கொள்வதற்கான மனவலிமையைப் பெறுகின்றான். தன்னலத்தைத் தாண்டிய சிந்தனை அவனிடம் உருவாகின்றது. இந்நிலையில் இறைவனில் திருவடி நீழலை அடைதல் மன அமைதியையும் மன உறுதியையும் அடைவதற்கான தத்துவ அடித்தளமாக அமைகின்றது என இக்குறளின் மூலம் வள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

வினைப் பயன்களின் வேதனை வாரா

அறியாமை இருளால் வரும் நல்வினை, தீவினை என்னும் இரண்டும், கடவுளின் மெய்ம்மைப் புகழை மட்டும் விரும்புபவரிடம் சேருவதில்லை என்பதை,

இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (குறள். 5)

எனும் குறளில் வள்ளுவர் எடுத்துரைக்கிறார். இக்குறளில் 'இருள்' என்பது அறியாமையைக் குறிக்கும் குறியீட்டுச் சொல்லாக அமைகின்றது. 'இருவினை' என்பது நல்வினை, தீவினை என்ற இருவகை வினைகளைக் குறிக்கின்றது. இறைவனின் உண்மையான புகழை விரும்பிப் போற்றுகின்றவர்களிடம் அறியாமையால் விளையும் இருவினைகளும் சேர்வதில்லை என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இக்குறள் வினைக் கொள்கை குறித்த ஆழமான சிந்தனையை முன்வைக்கின்றது. மனிதனின் செயல்களே அவனது வாழ்வின் விளைவுகளைத் தீர்மானிக்கின்றன என்ற கருத்து இந்திய மெய்யியல் மரபில் முக்கியமானதாக இருக்கின்றது. ஆனால் வள்ளுவர் இங்கு வெறுமனே நல்வினை, தீவினை ஆகியவற்றைப் பட்டியலிடவில்லை. அவற்றின் அடிப்படையான அறியாமையைச் சுட்டுகின்றார். அறியாமை நீங்கும்போது மனிதனின் செயல்களிலும் மாற்றம் நிகழ்கின்றது. உண்மையை உணர்ந்த மனம் அறவழியில் இயங்கத் தொடங்குகின்றது. எனவே, இறைவனின் புகழை உணர்தல் என்பது அறிவொளியை நோக்கி மனிதன் பயணிப்பதற்கான குறியீடாகவும் விளங்குகின்றது எனபதை வள்ளுவரின் இக்குறளில் காணமுடிகின்றது.

பூமியில் நெடுங்காலம் வாழலாம்

'மனமாகிய மலர்மீது சென்று இருப்பவனாகிய கடவுளின் சிறந்த திருவடிகளை எப்போதும் நினைப்பவர் இப்பூமியில் நெடுங்காலம் வாழ்வார்' என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இதனையே அவர்,

மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார் (குறள். 3)

என வெளியிடுகிறார். இக்குறளில் 'மலர்மிசை ஏகினான்' என்ற தொடர் தனித்துவமான பொருளாழம் கொண்டதாகும். மலரின் மீது அமர்ந்தவன் அல்லது மலர்போன்ற உள்ளத்தில் வீற்றிருப்பவன் என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். உரையாசிரியர்கள் இதனைப் பல்வேறு விளக்கங்களுடன் அணுகியுள்ளனர். 'மாணடி' என்பது சிறப்புமிக்க திருவடிகளைக் குறிக்கின்றது. அவற்றைச் சார்ந்தவர்கள் நிலத்தில் நீண்டகாலம் வாழ்வார்கள் என்று வள்ளுவர் கூறுகின்றார். இங்கு 'நீடுவாழ்தல்' என்பது உடலின் ஆயுட்காலத்தை மட்டும் குறிப்பதாகக் கொள்ள முடியாது. அறத்தால் நிலைபெறும் புகழ், ஒழுக்கத்தால் உருவாகும் மதிப்பு, பிறருக்கு நன்மை செய்வதால் கிடைக்கும் நிலையான வாழ்வியல் பெருமை ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகப் பொருள் விரிகின்றது. மனிதன் வாழும் காலத்தின் அளவைவிட அவன் வாழும் முறையின் தரமே சிறந்தது என்பதை இக்குறள் மறைமுகமாக உணர்த்துகின்றது.

ஐம்புலனடக்கமும் ஒழுக்க நெறியும்

‘மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளின் வழிப் பிறக்கும் தீய ஆசைகளை அழித்து, கடவுளின் பொய்யற்ற ஒழுக்க வழியிலே நின்றவர்கள் நெடுங்காலம் வாழ்வார்கள்’ என்பதை வள்ளுவர்,

பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார் (குறள். 6)

எனும் குறளில் விளக்குகிறார். மனிதனின் வாழ்வை உயர்த்துவதற்கான அடிப்படைத் தகுதியாகப் புலனடக்கத்தை வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் வழியாக மனிதனுக்குள் நுழையும் இன்ப நாட்டங்களைக் கட்டுப்படுத்துவதே புலனடக்கமாகும். ‘ஐந்தவித்தான்’ என்ற சொல், ஐம்புலன்களின் ஆசைகளை வென்ற இறைவனைக் குறிக்கின்றது. ‘பொய்தீர் ஒழுக்கம்’ என்பது பொய்மையும் கபடமும் நீங்கிய உண்மையான ஒழுக்கத்தைக் குறிக்கின்றது. இக்குறளில் குறிப்பிடப்படும் இறைவனின் பண்பை மனிதன் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நெறியாகவும் எடுத்துக்கொள்ளலாம். புலன்கள் மனிதனுக்கு இயற்கையாக அமைந்தவை. அவற்றை முற்றிலும் அழிப்பது வாழ்க்கையின் நோக்கமன்று; அவற்றின் வழியாகத் தோன்றும் அளவுகடந்த ஆசைகளுக்கு அடிமையாகாமல் வாழ்வதே உயர்ந்த நிலையாகும். இன்றைய நுகர்வுக் கலாச்சாரத்தில் இக்கருத்து மிகுந்த பொருத்தமுடையது. விளம்பரங்கள், பொருள் நாட்டங்கள், அதிகார ஆசைகள், உணர்ச்சிவயப்பட்ட செயல்கள் என மனிதனைப் பல்வேறு திசைகளில் இழுத்துச் செல்லும் சூழலில் புலனடக்கமே தனிமனித ஒழுக்கத்தின் காவலனாக அமைகின்றது என்பதை வள்ளுவர் அன்றைக்கே காட்டிச் செல்கின்றார்.

பிறவிக் கடலையும் கடக்கலாம்

அறக்கடலாக விளங்கும் இறைவனின் திருவடிகளைச் சேர்ந்தவர்தான் பிறவியாகிய கடலை நீந்திக் கடக்க முடியும். மற்றவர்கள் பிறவியாகிய கடலை நீந்திக் கடப்பது கடினம்.

அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்

பிறஆழி நீந்தல் அரிது (குறள். 8)

இக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் தத்துவச் செறிவுமிக்க குறள்களுள் ஒன்றாகும். இறைவனை இதில் ‘அறவாழி அந்தணன்’ என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். ‘அறவாழி’ என்பது அறத்தின் பெருங்கடலைக் குறிக்கின்றது. ‘அந்தணன்’ என்பது உயர்ந்த பண்பும் தூய்மையும் உடையவனைக் குறிக்கும் சொல்லாகப் பொருள்படுகின்றது. ‘அந்தணன் என்போன் அறவோன்’ என்பதும் இங்கு நினைக்கத் தக்கது.

அறம் என்பது தனிமனித ஒழுக்கத்தோடு மட்டும் தொடர்புடையதன்று. அது சமூக நன்மை, உயிரிரக்கம், அன்பு, நீதி, உண்மை, ஈகை ஆகியவற்றையும் உள்ளடக்கிய விரிந்த சொல்லாகும். இறைவனை அறத்தின் பெருங்கடலாகக் குறிப்பிடுவதன் மூலம் அறவாழ்வே உயர்ந்த வாழ்வின் அடிப்படை என்பதை வள்ளுவர் வலியுறுத்துகின்றார். இக்குறளில் 'பிறவாழி' என்ற சொல் குறிப்பிடத்தக்கது. பரிமேலழகர் உரையில் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றுள் அறம் தவிர்ந்த பொருள், இன்பம் ஆகியவை 'பிற' என விளக்கப்படுகின்றன (திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 8). இதன் மூலம் அறத்தின் முதன்மை தெளிவாகின்றது. அறம் என்னும் கரையைப் பற்றாமல் மனிதன் வாழ்வின் துன்பங்களைக் கடக்க முடியாது என்பதே இக்குறளின் உள்ளார்ந்த கருத்தாகும்.

பிறவிப் பெருங்கடலும் இறைச்சார்பு நிலையும்

கடவுளின் திருவடிகளைச் சார்ந்தவர் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடப்பர்; மற்றவர் நீந்தவும் மாட்டார்; அவர்களால் கடக்கவும் முடியாது என வள்ளுவர் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்

இறைவன் அடிசேரா தார் (குறள். 10)

முந்தைய ஒன்பது குறள்களின் கருத்துகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் அமைந்துள்ளது கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் இறுதிக் குறளான இக்குறள். மனித வாழ்க்கையைப் பெருங்கடலுக்கு ஒப்பிடுவது தமிழ் இலக்கிய மரபில் காணப்படும் சிறந்த உருவகமாகும். பிறப்பு, இறப்பு, துன்பம், இன்பம், ஆசை, ஏக்கம் எனப் பல்வேறு அனுபவங்களால் நிரம்பியதே மனித வாழ்வு. 'பிறவிப் பெருங்கடல்' என்ற உருவகம் வாழ்வின் நிலையாமையையும், அதிலிருந்து விடுபட வேண்டிய மனிதனின் முயற்சியையும் ஒருங்கே உணர்த்துகின்றது. இறைவனின் திருவடிகளைச் சார்ந்தவர்கள் இப்பெருங்கடலை நீந்திக் கடப்பார்கள் என்றும், அவ்வாறு சாராதவர்கள் அதனைக் கடக்க இயலாதவர்களாக இருப்பார்கள் என்றும் வள்ளுவர் கூறுகின்றார். பரிமேலழகர் இதனைப் பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பதற்கான துணையாக இறைவனின் திருவடிகள் அமைவதாக விளக்குகின்றார் (திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 8). இக்குறளின் சிறப்பம்சம் அதன் நிறைவுத் தன்மையாகும். முதல் குறளில் உலகின் ஆதிமுதல்வனைச் சுட்டிய வள்ளுவர், பத்தாம் குறளில் மனிதன் அடைய வேண்டிய இறுதி இலக்கைச் சுட்டுகின்றார். இதன் வழியாக அதிகாரம் ஒரு முழுமையான கருத்தியல் வட்டத்தைப் பெறுகின்றது. இறைவனின் முதன்மையை உணர்தல் தொடக்கமாகவும், பிறவித் துன்பத்தைக் கடத்தல் நிறைவாகவும் அமைகின்றது.

தத்துவக் கோட்பாடுகள்

மேற்கண்ட பத்துக் குறள்களையும் ஒருங்கிணைத்து ஆராயும்போது, ஐந்து முக்கியமான தத்துவப் பார்வைகள் வெளிப்படுகின்றன.

இறையியல்

கடவுள் வாழ்த்து அதிகாரம் இறைவனின் இருப்பையும், அவனது முதன்மையையும், ஒப்பற்ற தன்மையையும் எடுத்துரைக்கின்றது. ஆதிபகவன், வாலறிவன், எண்குணத்தான் போன்ற சொற்கள் இறைவனின் பல்வேறு பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

இறைவனை ஓர் உருவத்திற்குள் வரையறுக்காமல், அறிவு, அறம், தூய்மை, முழுமை போன்ற பண்புகளின் வழியாக விளக்குவது வள்ளுவரின் சிந்தனைப் பொதுமைக்குச் சான்றாக அமைகின்றது.

அறவியல்

இவ்வதிகாரத்தில் அறம் என்பது மறைமுகமான கருத்தாக மட்டும் இடம்பெறவில்லை. பொய்தீர் ஒழுக்கம், புலனடக்கம், மனத்தூய்மை, விருப்பு வெறுப்பின்மை போன்ற நடைமுறை வாழ்வியல் நெறிகளின் வழியாக வெளிப்படுகின்றது. இதனால் இறைநம்பிக்கையும் அறவாழ்வும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமைவதை உணர முடிகின்றது.

அறிவியல் மற்றும் கல்வியியல்

கல்வியின் பயன் குறித்து வள்ளுவர் எழுப்பும் வினா, கல்வியின் நோக்கத்தை மறுபரிசீலனை செய்யத் தூண்டுகின்றது. அறிவைப் பெறுவது மட்டும் கல்வியன்று; பெற்ற அறிவைச் சரியான வழியில் பயன்படுத்துவதே கல்வியின் உயர்ந்த பயனாகும். அறிவு பண்பாக மாற வேண்டும்; பண்பு ஒழுக்கமாக மலர வேண்டும் என்பதே வள்ளுவரின் ஆழமான கருத்தாக இருக்கின்றது.

உளவியல்

வேண்டுதல் வேண்டாமை இலான் என்ற குறளும், மனக்கவலை மாற்றல் அரிது என்ற குறளும் மனித மனத்தின் இயல்புகளை நுட்பமாக ஆராய்கின்றன. ஆசை, வெறுப்பு, எதிர்பார்ப்பு, ஏமாற்றம் ஆகியவை மன அமைதியைப் பாதிக்கின்றன. இவற்றைக் கடந்து மனச்சமநிலையை அடைவதே உயர்ந்த மனித நிலையாகும்.

மெய்யியல்

இருவினை நீக்கம், பிறவாழி நீத்தல், பிறவிப் பெருங்கடல் நீந்துதல் ஆகிய கருத்துகள் மெய்யியல் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. மனித வாழ்வின் இறுதி இலக்கு வெறும் பொருள் ஈட்டலோ, இன்பம் துய்த்தலோ அன்று; பிறவித் துன்பங்களைக் கடந்து உயர்ந்த நிலையை அடைதலே என்பதைக் கடவுள் வாழ்த்து அதிகாரம் வலியுறுத்துகின்றது.

கடவுள் வாழ்த்தும் சமயப் பொதுமையும்

திருக்குறளின் கடவுள் வாழ்த்து அதிகாரத்தை ஆராயும்போது எழுகின்ற முக்கியமான வினா, வள்ளுவர் குறிப்பிடும் கடவுள் யார் என்பதாகும். இக்கேள்விக்கு உரையாசிரியர்கள் தத்தம் சமய, தத்துவப் பின்னணிகளுக்கு ஏற்ப பல்வேறு

விளக்கங்களை வழங்கியுள்ளனர். குறிப்பாகப் பரிமேலழகர் உரையில் இறைவனின் பண்புகள் குறிப்பிட்ட தத்துவ மரபுகளோடு இணைத்து விளக்கப்படுகின்றன. ஆனால் வள்ளுவர் பயன்படுத்தும் சொற்களைக் கவனிக்கும்போது, அவற்றின் பொருள் குறிப்பிட்ட சமய எல்லையைத் தாண்டி விரிவடையும் தன்மையைக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. அவர் இறைவனை மதப்பிரிவுகளின் பெயர்களால் அழைக்கவில்லை. மாறாக, அறிவு, அறம், தூய்மை, புலனடக்கம், விருப்பு வெறுப்பின்மை, ஒப்பற்ற தன்மை ஆகிய பண்புகளின் வழியாக அடையாளப் படுத்துகின்றார். இதனால் இவ்வதிகாரம் பல்வேறு சமயங்களைச் சார்ந்த வாசகர்களும் தத்தம் நம்பிக்கைகளின் அடிப்படையில் அணுகுவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றது. இதனை மையமிட்டே, "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி" (பெ. சுந்தரம் பிள்ளை. மனோன்மணீயம், ப. 62) என்று பாடுகிறார். எனவே, கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் தனித்துவம் அதன் இறைநம்பிக்கையில் மட்டுமல்ல; இறைச்சிந்தனையை அறம் மற்றும் மனித வாழ்வின் உயர்ந்த நோக்கத்துடன் இணைப்பதிலும் அடங்கியுள்ளது.

சமகாலச் சமூகமும் திருக்குறள் கடவுள் வாழ்த்தும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட இக்குறள்கள் இன்றைய நவீனச் சமூகத்திற்கும் பொருந்துகின்றன என்பது அவற்றின் காலங்கடந்த சிறப்பாகும். இன்றைய உலகம் அறிவியல் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப முன்னேற்றத்திலும் பெரும் உயரத்தை அடைந்துள்ளது. ஆனால் மனித உறவுகளில் அன்பின்மை, சமூகத்தில் ஒழுக்கச் சிதைவு, அரசியலில் நேர்மையின்மை, தனிமனித வாழ்வில் மனக்கவலை ஆகிய பிரச்சினைகள் தொடர்ந்து காணப்படுகின்றன. இச்சூழலில் கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் கருத்துகள் சில முக்கியமான வழிகாட்டுதல்களை வழங்குகின்றன.

கல்வி அறிவோடு பண்பையும் வளர்க்க வேண்டும், தனிமனித வாழ்க்கையில் ஆசை, வெறுப்பு, கோபம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும், சமூக வாழ்க்கையில் உண்மை, நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும், மனித உறவுகளைப் பேணுவதில் மனச்சமநிலையையும் பொறுமையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும், வாழ்வியலில் நிலையற்ற பொருள்களைத் தாண்டி நிலையான அறமதிப்புகளைப் போற்ற வேண்டும். இவ்வகையில் கடவுள் வாழ்த்து அதிகாரம் பழமையான இறைவணக்கப் பாடல்களின் தொகுப்பாக இல்லாமல், நவீன மனிதனின் வாழ்வியல் சிக்கல்களுக்கும் பொருந்தக்கூடிய அறநெறி வழிகாட்டியாக விளங்குகின்றது.

திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்து அதிகாரத்தை முழுமையாக ஆராயும்போது, அது இறைவனைப் போற்றும் பத்துக் குறள்களின் தொகுப்பு என்பதைக் கடந்து, மனித வாழ்வின் அடிப்படைத் தத்துவங்களை எடுத்துரைக்கும் சிந்தனைக் கருவூலமாகத் திகழ்வது தெளிவாகின்றது. முதல் குறளில் உலகின் ஆதிமுதல்வனை

எடுத்துரைக்கும் வள்ளுவர், இரண்டாம் குறளில் கல்வியின் உண்மையான பயனை வினவுகின்றார். மூன்றாம் குறளில் இறைச்சார்பின் சிறப்பையும், நான்காம் குறளில் விருப்பு வெறுப்பற்ற மனநிலையின் உயர்வையும் ஐந்தாம் குறளில் அறியாமை மற்றும் இருவினை பற்றிய மெய்யியல் சிந்தனையையும், ஆறாம் குறளில் புலனடக்கத்தின் அவசியத்தையும் எடுத்துரைக்கின்றார். ஏழாம் குறளில் மனக்கவலை நீக்கத்தையும், எட்டாம் குறளில் அறத்தின் முதன்மையையும், ஒன்பதாம் குறளில் இறைவனின் எண்குணச் சிறப்பையும், பத்தாம் குறளில் பிறவிப் பெருங்கடலைக் கடக்கும் வாழ்வியல் இலக்கையும் நிலைநிறுத்துகின்றார். இவ்வதிகாரத்தில் இறைவன் என்பவன் வழிபாட்டிற்குரிய பொருளாக மட்டுமன்றி, மனிதன் அடைய வேண்டிய உயர்ந்த பண்புகளின் குறியீடாகவும் விளங்குகின்றான். இறைவனின் தூய்மை மனிதனின் மனத்தூய்மையாகவும், இறைவனின் புலனடக்கம் மனிதனின் ஒழுக்கமாகவும், இறைவனின் அறநிலை மனிதனின் அறவாழ்வாகவும் உருமாறுகின்றன. இதிலிருந்து புலப்படுவது யாதெனில், வள்ளுவர் இறைவனைப் போற்றுவதன் வழியாக மனிதனை உயர்த்துகின்றார் என்பதேயாகும். மனிதன் எவ்வளவு கல்வி கற்றிருந்தாலும் அவனிடம் பண்பும் ஒழுக்கமும் இல்லையெனில் அக்கல்வி முழுமை பெறாது. எவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும் அவனிடம் அறம் இல்லையெனில் அவ்வாழ்வு சிறப்புறாது. எவ்வளவு ஆற்றல் பெற்றிருந்தாலும் அவனிடம் மனத்தூய்மை இல்லையெனில் அவ்வாற்றல் பயனற்றதாகிவிடும். இத்தகைய வாழ்வியல் உண்மைகளைப் பத்துக் குறள்களுக்குள் அடக்கி வழங்கியிருப்பதே திருவள்ளுவரின் இறையற மெய்யியல் சிந்தனைப் பெருமையாகும். எனவே, கடவுள் வாழ்த்து அதிகாரத்தை இறைநம்பிக்கையின் அடையாளமாக மட்டுமல்லாமல், மனிதனின் அறிவு, அறம், ஒழுக்கம், மனத்தூய்மை, மெய்யுணர்வு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் உலகளாவிய வாழ்வியல் தத்துவமாகக் கருதுவதே பொருத்தமானதாகும். கடவுளை வாழ்த்துவதன் வழியாக மனிதனை அறவழியில் வாழச் செய்வதே திருவள்ளுவரின் நோக்கமாக இவ்வதிகாரத்தில் வெளிப்படுகின்றது. இதுவே கடவுள் வாழ்த்து அதிகாரம் காலத்தை வென்று நிற்பதற்கான அடிப்படைக் காரணமாகும்.

துணை நூற்பட்டியல்

References

[1.] திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154 டி.டி.கே. சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 18, 20ஆம் பதிப்பு : ஜூன் 1991.

[2.] திருக்குறள் எளிய உரை, இ. சுந்தரமூர்த்தி உரை, கலாச்சேத்திரா பப்ளிகேஷன்ஸ், கோவிலூர்மடாலயம், 52 குப்பையா தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033, முதற் பதிப்பு : அக்டோபர் 2015.

[3.] திருக்குறள், சாலமன் பாப்பையா உரை, கவிதா பப்ளிகேஷன், தபால் பெட்டி எண், 6123, 8 மாசிலா மணி தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600 017, நான்காம் பதிப்பு : பிப்ரவரி

[4.] பாரதியார் கவிதைகள் (மக்கள் பதிப்பு), கவிதா பப்ளிகேஷன், தபால் பெட்டி எண், 6123, 8 மாசிலாமணி தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600 017, ஆறாம் பதிப்பு : பிப்ரவரி 2016.

[5.] பெ. சுந்தரம் பிள்ளை, மனோன் மணீயம், வாசன் பதிப்பகம், கீழப்பட்டமார் தெரு, மதுரை – 625 001, பதிப்பு : 1978.